பேரூராட்சி அலுவலகம்,

திருப்பெரும்பூதூர்.

ந.க.எண்.21/2022 அ1 நாள் – 04.05.2022

# குறுகியகால ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

1998ம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம்

தமிழ்நாடு சட்டம் 43/1998)

திருப்பெரும்பூதூர் பேரூராட்சியில் 2022-2023 ம் ஆண்டு பொதுநிதியில் பணிகள் மேற்கொள்ள கீழ்கண்ட விவரப்படி மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 18.05.2022 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி வரையில் செயல் அலுவலரால் (அ) அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் 18.05.2022 புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கவோ, நிராகரிக்கவோ அல்லது வேறு தேதிக்கு மாற்றவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு. மேற்படி வேலைக்கான ஒப்பந்தப்படிவங்கள் http://townpanchayats.tn.gov.in/tender மற்றும் https://tenders.tn.gov.in என்ற இணை தளத்தில் இலவசமாகவும், உரிய கட்டணம் ரொக்கமாகவோ அல்லது Executive Officer, Sriperumbudur Town Panchayat என்ற பெயரில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் கேட்பு காசோலை அல்லது வங்கியாளரின் காசோலையாகவோ செலுத்தி 17.05.2022 செவ்வாய்கிழமை மாலை 5.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். மேலும் வேலைக்கான முன் வைப்பு தொகையை ரொக்கமாகவோ அல்லது Executive Officer, Sriperumbudur Town Panchayat என்ற பெயரில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் கேட்பு காசோலை அல்லது வங்கியாளரின் காசோலையாகவோ செலுத்தி 17.05.2022 செவ்வாய்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குள் செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமாக இதர நிபந்தனைகள் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் கேட்டு தெரிந்துக்கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த நாள் அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அன்றைய தினமே திறக்கப்படும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | முன் வைப்பு தொகை 1 % | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலையம் (4.00LL) நீர்தேக்க தொட்டி மூலமாக குடிநீர் விநியோகத்திற்கு தேவையான குடிநீர் ஆதாரத்தை பெருக்கிட சித்தா கல்லூரி அருகில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல் | 1270000/- | 12700/- | 6720/- |
| 2 | பேருந்து நிலையம் (4.00LL) நீர்தேக்க தொட்டி மூலமாக குடிநீர் விநியோகத்திற்கு தேவையான குடிநீர் ஆதாரத்தை பெருக்கிட அமரர் ராஜீவ் காந்தி நினைவகம் அருகில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல் | 1270000/- | 12700/- | 6720/- |
| 3 | ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகம் (2.00LL) நீர்தேக்க தொட்டி மூலமாக குடிநீர் நியோகத்திற்கு தேவையான குடிநீர் ஆதாரத்தை பெருக்கிட விஜிபி சந்தோஷ்புரம் அருகில் புதிய ஆழ்துளை கிணறு – 1 அமைத்தல் | 1070000/- | 10700/- | 6720/- |
| 4 | ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகம் (2.00LL) நீர்தேக்க | 1070000/- | 10700/- | 6720/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொட்டி மூலமாக குடிநீர் விநியோகத்திற்கு தேவையான குடிநீர் ஆதாரத்தை பெருக்கிட விஜிபி சந்தோஷ்புரம் அருகில் புதிய ஆழ்துளை கிணறு – 2 அமைத்தல் | | | |
| 5 | வார்டு எண்.13 ல் பண்டியம்மன் கோயில் அருகில் ஆழ்துளை கிணறு அமைத்தல் (Providing Mini Power Pump) | 450000/- | 4500/- | 840/- |
| 6 | வார்டு எண்.13 ல் மாணவர் விடுதி அருகில் ஆழ்துளை கிணறு அமைத்தல் (Providing Mini Power Pump) | 450000/ | 4500/- | 840/- |

**நிபந்தனைகள்**

1) ஒப்பந்தப்புள்ளிகள் வாங்குபவர்கள் பணியின் பெயர் தெளிவாக எழுதி குறிப்பிடப்பட்டுள்ளப்படி சீலிட்ட உறைகளை வழங்க வேண்டும்.
2) எக்காரணத்தை கொண்டும் இப்பேரூராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்யாதவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி படிவம் (ஷெட்டியுல் பார்ம்) வழங்கப்படமாட்டாது.
3) டேவணித் தொகை செலுத்தாத ஒப்பந்தப்புள்ளிகளை எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
4) ஒப்பந்தப்புள்ளிகள் குறிப்பிட்ட காலவரைக்குள் மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும். காலம் கடந்து வரும் ஒப்பந்தப்புள்ளிகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
5) ஒப்பந்தப்புள்ளி அங்கீகரித்து தகவல் கிடைக்கபெற்று மூன்று தினங்களுக்குள் ரூ.20.00 மதிப்புள்ள முத்திரைதாளில் எழுதி கையொப்பபம் இட்டுக்கொடுக்க வேண்டும். அதன் பிறகு தான் வேலைக்கான உத்திரவு வழங்கப்படும்.
6) பணி உத்திரவு கிடைக்கப்பெற்றவுடன் சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப அலுவலரை அணுகி விபரங்களை நன்கு அறிந்து கொண்டு வேலையை ஆரம்பித்து முடிக்க வேண்டிய காலத்திற்குள் செய்து முடிக்கப்பட வேண்டும்.
7) ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் பேரூராட்சி செயல் அலுவலருக்கு உரிமை உண்டு.
8) பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்கத் தவறினால் (அ) பொறியாளர்களின் அறிவுரைப்படி செய்ய தவறினாலோ முன் வைப்பு தொகையை பறிமுதல் செய்வதுடன் இவ்வேலைகளுக்கு மறு ஒப்பந்தம் கோரி அதனால் ஏற்படும் சகல இழப்புகளையும் ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும். ஒப்பந்ததாரர் பதிவு இரத்து செய்யப்படும்.
9) பணி செய்ய அனுமதி பெற்ற ஒப்பந்ததாரர் வேறு ஒருவருக்கு மறு ஒப்பந்தம் செய்வதோ (அ) வேறு நபருக்கு மாற்றுவோ கூடாது.
10) மதிப்பீட்டில் கண்டுள்ளப்படி பணியை திருப்தியாக நல்ல முறையில் செய்யவில்லையெனில் செய்த வேலைக்குரிய தொகை வழங்கப்படமாட்டாது.
11) மதிப்பீடு விகிதத்திற்கு 10% க்கு குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்து எடுக்கப்படும் வேலைகளுக்கு 10% கூடுதல் வைப்பு தொகை ஒப்பந்ததாரர் கண்டிப்பாக செலுத்திய பிறகு அவ்வேலைகளுக்கு உரிய உத்திரவு வழங்கப்படும்.
12) வேலைகள் துவங்குவதற்கு முன்பு தொழில்நுட்ப அலுவலர் மற்றும் செயல் அலுவலர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.
13) முடிக்கப்பட்ட பணிக்கு பட்டியல் தொகையில் 5% காப்பு தொகை மற்றும் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் வருமானவரி, விற்பனைவரி மற்றும் அரசின் மூலம் அறிவிக்கப்படும் வரிகள் பிடித்தம் செய்யப்படும்.
14) சிமெண்ட் பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களே சொந்த செலவில் சிமெண்ட் வாங்கி பணி செய்வதுடன் சிமெண்ட் வாங்கப்பட்டதற்குண்டான தொடர்புடைய நிறுவனத்தில் பட்டியல் பெறப்பட்டதை பணி செய்து முடிக்கப்பட்டு பட்டியல் வழங்கும் போது தரம் அறிய அளிக்கப்பட வேண்டும்.
15) சிமெண்ட் இதர இனங்களுக்கு நடைமுறை விதிகளின்படி சோதனை அறிக்கை (Test Report) ஒப்பந்ததாரர் செலவிலேயே கண்டிப்பாக பெறப்பட வேண்டும்.

16) பணிகள் முடிவுபெற்று அதற்குரிய அளவுகள், மேலளவுக்ள எடுக்கப்பட்டு பொறியாளர்களால் முறையாக மதிப்பு சான்றிதழ் கொடுத்த பிறகு பட்டியல்படி தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
17) செலுத்தப்படும் வைப்பு தொகைக்கு எந்தவிதமான வட்டியும் வழங்கப்படமாட்டாது எனவும், மேற்படி பணி செய்யப்பட்டு அதற்கான தணின்கை முடிந்த பிறகு தடையேதும் இல்லையெனில் தணிக்கை அறிக்கை கிடைத்த பிறகு செலுத்திய டேவணித் தொகை காசோலை மூலம் திருப்பி வழங்கப்படும்.
18) பணி செய்து முடிக்கப்பட பின்னர் பட்டியல் தொகை பெறுவதற்கு முன்பாக மதிப்பீட்டு தொகையில் 1% தொகையினை தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலநிதி பிடித்தம் செய்யப்படும்.



**செயல் அலுவலர்,**
**திருப்பெரும்பூதூர் பேரூராட்சி,**
**காஞ்சிபுரம் மாவட்டம்.**

**பெறுநர்**

**சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள்.**

<u>நகல்</u>

1) பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–28 அவர்களின் தகவலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2) மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களின் தகவலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3) சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், திருப்பெரும்பூதூர் தொகுதி அவர்களின் தகவலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
4) பேரூராட்சிகள் உதவி இயக்குநர், காஞ்சிபுரம் மண்டலம் அவர்களின் தகவலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
5) உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள், காஞ்சிபுரம் மண்டலம் அவர்களின் தகவலுக்கு.
6) உதவி பொறியாளர், திருப்பெரும்பூதூர் பேரூராட்சி.
7) தலைவர், துணைத்தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள், திருப்பெரும்பூதூர் பேரூராட்சி அவர்களின் தகவலுக்கு.
8) அலுவலக விளம்பர பலகைக்கு மற்றும் தனிப்பிரதிகள் கோப்புக்கு.